**மடுல்ல பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 01 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஆகஸ்ட் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மடுல்ல பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குக் கிடைத்த ரூபா 18,851 தொகையான உள்ளக கிராமப் பராமரிப்புக் கணக்கின் வட்டி மற்றும் உள்ளக கிராமங்களிலிருந்து கிடைத்த பணத்தை நிலையான வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டமையினால் கிடைத்த ரூபா 525,758 தொகையான வட்டி என்பன கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய ஒப்பேகொட நூலகக் கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய கைத்தொழில் மானியமான ரூபா 1,038,402 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய நூலகங்களுக்காக முன்னைய ஆண்டுகளின் போது நன்கொடையாகக் கிடைத்த 385 நூலகப் புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 187,141 தொகையான நானாவித கடன்கொடுத்தோருக்காக கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கடந்த 07 வருடங்களுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 128,811 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

03 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 36,715,260 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 34,903,933 ஆக இருந்தது.

**1.3.4 கிடைக்கவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் 06 ஊழியர்களிடமிருந்து ஊழியர் கடன் ரூபா 36,904 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 23,663,140 கூட்டுத்தொகையான 03 சொத்து விடயங்களையும், ரூபா 19,956,560 தொகையான 02 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) 49 மற்றும் 52 ஆம் பிரிவுகள் | அங்கீகாரமின்றி கட்டிட எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்ட 04 சமிக்ஞைக் கோபுரங்களை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 136 ஆம் பிரிவு | சபைக்குரிய கடைகளுக்கான வாடகையை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து மதிப்பிடு செய்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 152 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பரிவர்த்தனை சமிக்ஞைக் கோபுரங்களுக்காக வருடாந்த வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 25,173,986 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| 237(அ) | மீளாய்வாண்டில் 7 சந்தர்ப்பங்களின் போது ரூபா 140,530 தொகையான கொள்வனவுகளுக்காக இருப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கைக் குடியரசின் 2009 ஏப்ரல் 12 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் V ஆவது இணைப்பின் 6 ஆம் பந்தி | அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்ட 03 கோபுரங்களுக்காக ஒவ்வொரு 5 மீற்றர் உயரத்திற்கும் ரூபா 10,000 படி கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 832,060 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,694,302 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 445,664 |
| முத்திரைக் கட்டணம் | 583,656 |

**2.3 மிகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 32,697 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) வருமான நிருவாகம்